## பாடம் 16 எகிப்திலே யோசேப்பின் சகோதரர்கள் (ஆதியாகமம் 42-45)

ஒரு மனிதன் உண்மையாகவே பசியாய் இருக்கும் போது, அதினால் அவன் எந்தவொரு காரியத்தையும் செய்யத் துணிவான். கானான் தேசம் கொடிய பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. யாக்கோபு சாவின் விளிம்பில் இருந்த தன் குமாரருக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் உணவினை தேட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. எகிப்திலே தானியம் உண்டென்று மக்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அது நிச்சயமாக தேவனால் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் அல்ல.

எனவே யாக்கோபு தாமதித்து, தேவனிடம் ஜெபித்தான். முடிவிலே, நம்பிக்கையற்ற சூழ்நிலையில் தன் பத்து குமாரரையும் 320 கீ.மீ (200 மைல்கள்) தொலைவில் தென்மேற்கில் உள்ள குறுக்கே பாலைவனங்கள் நிறைந்த தனக்கு பகையான தேசத்திற்கு, உணவு தானியங்களை கொள்ளும்படி எகிப்திற்கு அனுப்பினான். தன் இளைய குமாரன் பென்யமீனை மட்டும் தன்னுடன் வீட்டிலே பத்திரமாக வைத்துக் கொண்டான். ராகேலின் முதல் மகனான யோசேப்பை இழந்தது போல, பென்யமீனையும் இழந்து விடுவோம் என யாக்கோபு பயந்தான்.

பத்து சகோதரரும் எகிப்தை அடைந்து, அந்த நாட்டின் அதிபதியை வணங்க வேண்டும். அவர்தான் வெளிதேசத்தை சேர்ந்தவருக்கு தானியத்தை கொள்ள அனுமதி வழங்குவார். இவ்வாறு அவர்கள் யோசேப்புக்கு முன்பாக முகங்குப்புற தரையிலே விழுந்து வணங்கிய போது வளர்ந்து பெரியவனாய் இருந்த தன் சகோதரனை அவர்களால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும் யோசேப்பு உடனடியாக அவர்கள் யாரென்று தெரிந்து கொண்டு தன் சிறு வயது சொப்பனங்களை நினைவு கூர்ந்தான்.

அவனுடைய சொப்பனத்தில், அவன் சகோதரனின் அரிக்கட்டுகளும் அவனது பெற்றோரின் அரிக்கட்டுகளும், அவனுடைய அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றன. யோசேப்பு அவர்களுக்கு தன்னை வெளிபடுத்த வேண்டாம் என முடிவு செய்தான். 20 வருடங்களுக்கு முன்னால் யோசேப்பு அவர்களை கடைசியாக பார்த்ததினால் தற்பொழுது அவர்களுடைய இருதயங்களில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்பதை முதலாவது சோதித்துப் பார்க்க முடிவு செய்தான்.

“நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” என்று கடுமையாய் அவர்களிடம் கேட்டான். அவர்கள் “நாங்கள் கானான் தேசத்திலிருந்து உணவு தானியங்களை பெறுவதற்காக வந்திருக்கிறோம்” என்றார்கள். “நீங்கள் பொய்யர், வேவுகாரர்” என யோசேப்பு கடினமாய் பேசினான். அவன் சகோதரர்கள் மறுத்து, “இல்லை நாங்கள் நிஜஸ்தர். கானான் தேசத்தில் வசிக்கும் ஒரு தகப்பனின் புத்திரர். இளையவன் இப்பொழுது எங்கள் தகப்பனிடத்தில் இருக்கிறான், மற்றும் ஒருவன் காணாமற் போனான்” என்றார்கள்.

அதற்கு, யோசேப்பு அவர்களுடைய மொழி தனக்கு புரியாதது போல் நடித்து, ஒரு மொழி பெயர்ப்பாளன் மூலமாக அவர்களிடம் பேசினான். அப்பொழுது அவன் “உங்கள் வார்த்தைகள் உண்மையென்று நிருபிக்க, உங்களில் ஒருவன் காவற்கூடத்தில் கட்டுண்டிருக்கட்டும். மற்றவர்கள் புறப்பட்டு பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்கு தானியம் கொண்டு போங்கள். ஆனால் உங்கள் இளைய சகோதரனை என்னிடத்திற்கு அழைத்துக் கொண்டு வர வேண்டும். அப்பொழுது உங்கள் வார்த்தைகள் மெய்யென்று விளங்கும்” என்றான். பிறகு அவன் சிமியோனைப் பிடித்து, அவர்களுக்கு முன்பாக கட்டுவித்தான்.

யோசேப்பு மற்ற ஒன்பது சகோதரரின் சாக்குகளை தானியத்தால் நிறைத்து அவர்கள் தேசத்திற்கு திருப்பி அனுப்பினான். அவர்கள் புறப்பட்ட அன்று ராத்திரியிலே தங்குவதற்கு நிறுத்திய போது, ஒவ்வொருவரும் தன் சாக்கை திறந்தபோது, அவர்கள் தானியத்திற்கு செலுத்திய வெள்ளியை சாக்கின் வாயிலே கண்டார்கள்.

அவர்கள் பயந்து, நடுங்கி ஒருவரை ஒருவர் பார்த்து, “தேவன் நமக்கு இப்படி செய்தது என்ன? நெடுங்காலத்திற்கு முன்பு நாம் நம் இளைய சகோதரனுக்கு விரோதமாய் பாவம் செய்ததற்கு அவர் நம்மை தண்டிக்கிறார்” என்று சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் கானான் தேசத்திற்கு திரும்பி வந்து, யாக்கோபிடம் நடந்தவற்றையெல்லாம் கூறினார்கள். அவன் மிகவும் திகிலடைந்து பென்யமீனை எகிப்திற்கு கொண்டு போவதைப் பற்றி மேற்கொண்டு தான் எதையும் பேசவோ, கேட்கவோ மறுத்தான்.

வெகு சீக்கிரத்தில் தானியங்கள் செலவழிந்தன. பஞ்சம் மிகவும் கொடியதாய் இருந்ததினால், பிள்ளைகள் பசியினால் அழுதார்கள். யாக்கோபு தன் குமாரரை எகிப்திற்கு திரும்பிபோய் இன்னும் அதிக தானியங்களை வாங்கிக் கொண்டு வர சொன்னான். ஆனால் யூதா, எகிப்தின் அதிபர் பென்யமீன் இல்லாமல் திரும்பி வரக்கூடாது என எச்சரித்ததை நினைவு படுத்தினான்.

அதற்கு யாக்கோபு, "பென்யமீனை நீங்கள் என்னிடத்திலிருந்து கொண்டு போக கூடாது. யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை, பென்மீனையும் கொண்டு போக பார்க்கிறீர்கள். இதெல்லாம் எனக்கு விரோதமாய் நடக்கிறது. இவனையும் நான் இழந்தால், நான் சஞ்சலத்தாலே சாவேன்" என்றான்.

உடனே யூதா முன்வந்து, "நான் பென்யமீனின் பாதுகாப்பிற்கு தனிப்பட்ட முறையில் உத்தரவாதம் அளிக்கிறேன். எனவே நாங்கள் போகிறோம். நமக்கு இப்போது உணவு தேவையாய் இருக்கிறது" என்று வாக்குறுதி அளித்தான்.

தயக்கத்துடனே யாக்கோபு அதற்கு ஒத்துக்கொண்டான். யாக்கோபு அவர்களிடம் "சிறப்பான வஸ்துகளில் கொஞ்சம் தேனும், கந்தவர்க்கங்களும் அந்த மனிதனுக்கு காணிக்கையாக கொண்டு போங்கள் கூடவே தானியத்திற்கான பணத்தையும் இரட்டிப்பாக எடுத்துக் கொண்டு போங்கள்" என்று சொன்னான். மேலும், "சிமியோனையும், பென்யமீனையும் உங்களுடனே திரும்ப அனுப்பி விடும்படி தேவன் உங்களுக்கு இரக்கம் கிடைக்கப் பண்ணுவராக. என்னை பொறுத்தமட்டும் நான் நம்பிக்கை இல்லாத நிலையில் பிள்ளையற்றவன் போல் ஆனேன்" என்றான். சகோதரர்கள் பென்மீயனை கூட்டிக்கொண்டு எகிப்திற்கு விரைந்தார்கள்.

இந்த முறை பென்யமீன் அவர்களோடே கூட வருகிறதை யோசேப்பு கண்டு, தன் வீட்டு விசாரணைகாரனிடம், அவர்களை சாப்பாட்டிற்காக தன் வீட்டிற்கு அழைத்து கொண்டு போகச் சொன்னான். தாங்கள் யோசேப்பின் வீட்டிற்கு கொண்டு போகப்படுகிறதை அவர்கள் கண்டு பயந்து, தங்கள் சாக்குகளில் முன்பு காணப்பட்ட பணத்தை எடுத்து வீட்டு விசாரனைகாரனிடம் கொடுக்க முயற்சித்தார்கள்.

அவனோ "பயப்பட வேண்டாம். உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்கு புதையலாக கட்டளையிட்டார். நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது" என்று பதிலளித்தான்.

யோசேப்பு வீட்டிற்கு வந்த போது, அவர்கள் தங்கள் கையிலிருந்த காணிக்கையை அவனிடத்தில் கொண்டு போய் வைத்து, தரை மட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள். அவன் அவர்களுடைய தகப்பனை குறித்து விசாரித்து, தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் சகோதரன் பென்யமீனை கண்டான். அவன், "மகனே தேவன் உனக்கு கிருபை செய்யக்கடவர்" என்றான்.

யோசேப்பு தன் இளைய சகோதரனை பார்த்ததினால் உணர்ச்சி வசப்பட்டு, அழுகிறதற்கு தனியாய் இடத்தை தேடி போனான். பின்பு வேலைக்காரர், மூத்தவன் முதல் இளையவன் வரைக்கும் அவனவன் வயதின்படியே அவர்களை உட்கார வைத்தார்கள். யோசேப்பு தனக்கு முன் வைக்கப்பட்டிருந்த போஜனத்தில் அவர்களுக்கு பங்கிட்டு அனுப்பினான். அவர்கள் எல்லாருடைய பங்குகளைப் பார்க்கிலும் பென்மீயனுடைய பங்கு ஐந்து மடங்கு அதிகமாயிருந்தது.

மறுநாள், அந்த மனிதர்கள் தங்கள் சாக்குகளை தானியத்தினால் நிரப்பிக்கொண்டு கானானை நோக்கி புறப்பட்டு சென்றார்கள். யோசேப்பு பென்யமீனுடைய சாக்கிலே தன் வெள்ளி பான பாத்திரத்தை போடும்படி வீட்டு விசாரணைக்காரருக்கு கட்டளையிட்டான்.

அவர்கள் வெகுதூரம் போவதற்கு முன்னே தன் வேலைக்காரனை அனுப்பி அவர்களை பிடித்து, "நீங்கள் நன்மைக்கு தீமை செய்தது என்ன? யார் எங்கள் எஜமானின் பானபாத்திரத்தை திருடியது?" என்று கேட்கச் சொன்னான். சகோதரர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். அவர்கள் கண்மூடித்தனமாக முடிவெடுத்து, "நாங்கள் இப்படிப்பட்ட காரியத்தை செய்ய மாட்டோம். அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலை செய்யப்படக்கடவன். மற்றவர்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம்" என்று அறிவித்தார்கள்.

அவனவன் தன்தன் சாக்கை திறந்தனர். வீட்டு விசாரணைக்காரன் அந்த பாத்திரத்தை பென்யமீனின் சாக்கிலே கண்டுபிடித்தான். அவர்கள் அனைவரும் மிகவும் திகிலடைந்து, தங்கள் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டார்கள். அவர்கள் பட்டணத்திற்கு திரும்பி போய், யோசேப்பிற்கு முன்பாக தரையிலே விழுந்தார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி, "நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள்?" என்று அதிகாரத்துடன் கேட்டான்.

அதற்கு யூதா, "எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? நாங்கள் அனைவரும் உமக்கு அடிமைகளாவோம்" என்று பதிலளித்தான்.

ஆனால் யோசேப்போ, "எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப்பான், நீங்களோ சமாதானத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள்" என்றான்.

அதற்கு யூதா, "நான் பென்யமீனின் பாதுகாப்பிற்கு என் தகப்பனிடம் உத்திரவாதம் அளித்திருக்கிறேன். அவனுக்கு பதிலாக நான் உமக்கு அடிமையாயிருக்கிறேன். அவன் வீட்டிற்கு வராமல் இருந்தால், என் தகப்பன் படுகின்ற சஞ்சலத்தை என்னால் தாங்கி கொள்ள முடியாது. அவர் கண்டிப்பாக மரித்துப் போவார்" என்று கெஞ்சினான்.

முடிவிலே, யோசேப்பு தன்னை அடக்கிக்கொள்ளக் கூடாமல் விசாரணைகாரர் யாவரையும் அறையை விட்டு வெளியே அனுப்பி, மனமுடைந்து அழத் தொடங்கினான். அவன், "நான் தான் யோசேப்பு" என்றான். சகோதரர்கள் பயந்து, பேசமுடியாமல் போனார்கள்.

யோசேப்போ "வாருங்கள், கிட்டே வந்து பாருங்கள். நீங்கள் அடிமையாய் விற்றுப்போட்ட உங்கள் சகோதரன் நான்தான். நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம். அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். தேசத்திலே இப்பொழுது இரண்டு வருஷமாக பஞ்சம் உண்டாயிருக்கிறது. இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். உங்களை உயிரோடே காப்பதற்காக

தேவன் என்னை உங்களுக்கு முன்னமே இங்கே அனுப்பினார்" என்றான்.

மேலும் "நீங்கள் சீக்கிரமாய் தீவிரித்து என் தகப்பனிடத்திற்கு போய், என்னிடத்தில் வாருங்கள். கோசேன் நாட்டின் எல்லையில் எனக்கு அருகிலே நீங்கள், உங்கள் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் மற்றும் உங்களுக்கு சொந்தமான எல்லா ஆடுமாடுகள், மந்தைகளோடும் இங்கே வசியுங்கள். உங்களுக்கு தேவையான எல்லாவற்றையும் நான் அளிப்பேன் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்றான். பார்வோன் இந்த சந்தோஷமான செய்தியை கேட்டு, யோசேப்பிற்கு எகிப்திலே சிறந்தவற்றை அளிப்பதாக உறுதி அளித்தான்.

இந்த பாடம் முக்கியமானது. ஏனென்றால் தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையில் பகையினால் வரும் பாடுகளை கடந்து செல்வதும் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியே என்பதை விளக்குகிறது. யோசேப்பு தன்னுடைய குடும்பத்தை காப்பாற்ற உடலளவில் மட்டும் எகிப்திற்கு கொண்டு செல்லபடவில்லை. அவன் தன்னுடைய துன்பங்களினால் பக்குவப்படுத்தப்பட்டதே எகிப்திலே தனக்கு கொடுக்கப்பட்ட பெரிய பொறுப்பை முடிக்க அவனை தயாராக்கியது.

தேவன் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கின்ற கடினமான சூழ்நிலைகளை நம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் நாம் அவரை விசுவாசத்தோடே நம்பும் போது, எல்லா காரியங்களும் நம்முடைய நன்மைக்காகவும் தேவனுடைய நாம மகிமைக்காகவும் நடக்கும்.

இந்த பாடத்தின் முக்கியமான உண்மை என்னவென்றால்,தேவன் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றுவதின் மூலம் தன் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். தம்முடைய நித்தியமான திட்டத்தின் பகுதியாக அவர்களின் தேவைகளை சந்திப்பார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. ஏன் யோசேப்பு, தன் சகோதரர்கள் எகிப்திற்கு வந்த போது அவர்களை முதலில் சோதிக்க முடிவு செய்தான்?(6 வினாடிகள் நிற்கவும்)

   ‘அவர்களுடைய இருதயங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய,அவர்களை சோதிக்க முடிவு செய்தான்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. எந்த நோக்கத்திற்காக தேவன் யோசேப்பை எகிப்திற்கு அழைத்து வந்தார்?(6 வினாடிகள் நிற்கவும்)

   ‘‘தன் குடும்பத்தை உயிரோடு காப்பதற்காக யோசேப்பை தேவன் அழைத்து வந்தார்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. எப்படி, பென்யமீனின் மீதான் அக்கறையை பற்றிய உத்திரவாதம், யூதாவின் உள்ளம் மாறியதை வெளிக்காட்டுகிறது? (6 வினாடிகள் நிற்கவும்)

   ‘யூதா பென்யமீனின் பாதுகாப்பை குறித்து யாக்கோபிற்கு உத்திரவாதம் அளித்திருந்தான்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்த பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்த பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

யோசேப்பை பற்றிய கடந்த இரண்டு பாடங்களில் சொல்லப்பட்ட கருத்துகளை பகிர்ந்து கொண்ட நபரிடமே இந்த பாடத்தையும் பகிருங்கள். அவரிடம் ‘‘தேவன் தன்னுடைய பிள்ளைகள் மீது அக்கறை கொண்டு அவர்களுக்கு உணவும்

வசிப்பிடமும் அளித்து, அவர்களுடைய வாழ்வின் கடினமான நேரங்களில், அதைப் பார்க்கும், நமது கண்ணோட்டத்தை எப்படி மாற்றுவார் என்று நினைக்கிறீர்கள்? என்று கேட்கவும். மேலும் ஏன் அவர்கள் விசுவாசிக்கிறார்கள்? எதை அவர்கள் விசுவாசிக்கிறார்கள்? என்பதை அவர்களை விளக்கச் சொல்லவும்.

பாடம் முடிந்தது